DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No.412/2022**

| | | |
|---|---|---|
| Name | : அருண்குமார் | **Pw2** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of November 2023.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பில் 2 வது சாட்சி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

என்னுடைய ஊர் புன்னையாபுரம் ஆகும். 12.10.2022 ம் தேதி புளியங்குடி வம்சவிருத்தி நகரின் அருகே விபத்து நடந்தது. விபத்து நடந்த சாலை கொல்லம் –மதுரை தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். அந்த சாலையானது 100 மீ அகலத்தில் 2 வாகனங்கள் ஒரே நேரத்தில் செல்லும்அளவிற்கு அகலமான சாலை என்றால் சரிதான். நான் டீ குடித்துக்கொண்டிருந்த இடமானது ரோட்டின் மேல்புறம் கிழக்கு நோக்கி இருந்தது. விபத்தில் இறந்த நபர் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்துகொண்டிருந்தார். சாலை விதிகளை அனுசரித்து சென்றிருந்தால் விபத்தை

தவிர்த்திருக்கலாம் என்றால் இவர்கள் சாலை விதிகளை அனுசரித்து தான் வந்துகொண்டிருந்தார்கள். விபத்தில்இறந்தவர் எந்த பிராண்ட் தலைக்கவசம் அணிந்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் இறந்த நபர் தலைக்கவசம் அணிந்திருந்ததாகக் குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்தில் இறந்த நபர் சொக்கம்பட்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக இருந்ததால் எனக்கு தெரிந்தவர் ஆவார். விபத்து சமயத்தில் அவர் சேர்ந்தமரம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக இருந்தார் என்றால் சரிதான். மனுதாரர்கள் என்ன வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை ஏதும் வரவில்லை. இறந்தநபர் எனக்கு பழக்கமானவர் என்பதால் அவருக்காகவும், அவரது குடும்பத்திற்காகவும் சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.11.22 17:03:42 +0530